செ.வெ.எண் : 951/2017 நாள் : 10.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**புயலால் சேதமடைந்துள்ள வீடுகளுக்கு முழுமையாக உதவித்தொகை பட்டுவாடா**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

வருவாய்த்துறையின் மூலம் நடைபெற்று வரும் நிவாரணப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டு சேதமடைந்துள்ள வீடுகள் குறித்த விபரங்கள் சேகரிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. தற்போதுள்ள கணக்கீடுகளின்படி முற்றிலுமாக சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்ட 1,096 வீடுகளில் 1,096 வீடுகளுக்கு ரூ.54,80,000/- மதிப்பிலும், பகுதியாக சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்ட 3,936 வீடுகளில் 3,396 வீடுகளுக்கு ரூ.1,61,37,600/- மதிப்பிலும் என மொத்தம் இதுவரை சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்ட 5,032 வீடுகளின் உரிமைதாரர்களுக்கு ரூ. 21,617,600/- நிவாரணத்தொகை அந்தந்த உரிமையாளர்களின் வங்கி கணக்குகளில் (இ.சி.எஸ் மூலம்) நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. புயலினால் பாதிக்கப்பட்ட வீடுகள் ஏதேனும் விடுபட்டிருந்தால் அருகில் உள்ள வருவாய் கிராம நிர்வாக அலுவலரிடமோ அல்லது சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளரிடமோ அல்லது வட்டாட்சியரிடமோ தெரிவிக்கலாம்.

மேலும், ஓகி புயலின் எதிரொலியாக மாவட்டத்தில் மரணமடைந்த 11 நபர்களில் 10 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு தலா ரூ. 4 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.40 இலட்சம் நிவாரண உதவித்தொகை அவர்களது வங்கி கணக்கில் (இசிஎஸ் முறையில்) வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்டு, 29 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 1041 குடும்பங்களை சார்ந்த 653 ஆண்கள், 1,318 பெண்கள், 420 குழந்தைகள் உட்பட மொத்தம் 2,391 நபர்கள் இயல்பு நிலை திரும்பியதையொட்டி, தங்கள் இல்லத்திற்கு சென்றனர். மேலும், நேற்றுவரை தோவாளை வட்டம், தடிக்காரன்கோணம் சமுதாயகூட நிவாரண முகாமில் 70 குடும்பங்களை சார்ந்த 58 ஆண்கள், 67 பெண்கள், 9 குழந்தைகள் உட்பட 134 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டு வந்தநிலையில், இயல்புநிலை திரும்பியதையொட்டி அவர்களும் தங்கள் இல்லத்திற்கு திரும்பியுள்ளனர்.

மேலும், பயிர்சேதம் கணக்கெடுக்கும் பணி மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவித்தொகை வழங்கும் நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில், மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**